ஸ்ரீ

லோகரஞ்சனி.

இந்து ஸ்திரீபுருஷர்கள் ஞானாபிவிருத்தியின் பொருட்டு பிரசுரமாகும்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம் - க0.] துர்முகிஸ்ரீ ஆவணிமீ. [எண் - அ.

வேதாகமப் பிரகரணம்.

யஜுர்வேத சம்பந்தமான

கைவல்லியோபநிடதம்.

సహనావవత్వితిశాంతిః.

హరిః ఓమ్॥ అథాశ్వలాయనో భగవంతం పరమేష్ఠినం పరిసమేత్యోవాచ । అధీహి భగవన్ బ్రహ్మవిద్యాం వరిష్ఠాం సదాసద్భిస్సేవ్యమానాం నిగూఢాం । యయాచిరాత్సర్వపాపం వ్యపోహ్య పరాత్పరం పురుషం యాతి విద్వాన్ ।

ஹரி: ஓம். ஆஶ்வலாயனர் ஞானதசையையடைந்த பின்னர், பரமேட்டியாகிய பிரம்மாவின்பாலடைந்து, ஓ! பகவானே! உயர்ந்ததும், எக்காலமும் சாதுக்களாலே உபாசிக்கத்தக்கதும், இரகசியமானதும், எதனால் ஞானவான் பாபங்களைக்கடிந்து சிரேட்டத்துக்குஞ் சிரேட்டமான பரமபுருஷனை யடைவனோ, அத்தகைய பிரம்மவித்தையை அருளிச்செய்ய வேணுமென்று வினவினர்.

తస్మై స హోవాచ పితామహశ్చ శ్రద్ధా భక్తి ధ్యాన యోగాదవేహి । నకర్మణా నప్రజయా ధనేన త్యాగేనైకే అమృతత్వ మానశుః ।

அவருக்குப் பிதாமகன் அருள்வா ராயினர். முனிசிரேட்டா! அதை சிரத்தை, பக்தி, தியானம், யோகங்களால் அறிவீராக. ஞானிகள் கருமத்தினாலும், சந்ததியாலும், தனத்தினாலும், தியாகத்தினாலும் அமிருத ஸ்தானத்தை அடைகிறதில்லை. சந்நியாசத்தினாலே அமிருதமென்கிற மோக்ஷஸ்தானத்தை அடைகின்றார்கள்.

పరేణనాకం నిహితం గుహాయాం విభ్రాజదే తద్యతయో విశంతి । వేదాంత విజ్ఞాన సునిశ్చితార్థాః సన్న్యాస యోగాద్యతయశ్శుద్ధసత్వాః । తే బ్రహ్మలోకేషు పరాంతకాలే పరామృతాత్పరిముచ్యంతి సర్వే ।

சொர்க்கத்திற்கு மேலும், இருதயமாகிற குகையிலும் விளங்குகிற பிரம்மசொரூபத்தை வேதாந்த விஞ்ஞானத்தினால் நிச்சிதார்த்தத்தைத் தெளிந்து, எல்லாவற்றிலும் விரக்தியடைந்த சுத்த சத்துவகுண சம்பந்நாளான எதிகள் அந்த ஸ்தானத்தை யடைகின்றார்கள். அவர்கள் அந்தியசெனனத்தின் முடிவில் பிரம்ம லோகங்களில் பரமாத்தும ஞானத்தை யடைந்து மோக்ஷத்தை யடைகின்றார்கள்.

వివిక్తదేశేచ సుఖాసనస్థశ్శుచిస్సమగ్రీవ శిరశ్శరీరః । అత్యాశ్రమస్థస్సకలేంద్రియాణి నిరుధ్యభక్త్యా స్వగురుం ప్రణమ్య । హృత్పుండరీకం విరజం విశుద్ధం విచింత్య మధ్యే విశదం విశోకం । అచింత్య మవ్యక్త మనంత రూపం శివం ప్రశాంత మమృతం బ్రహ్మయోనిం । తదాది మధ్యాన్త విహీన మేకం విభుం చిదానంద మరూప మద్భుతం । ఉమాసహాయం పరమేశ్వరం ప్రభుం త్రిలోచనం నీలకంఠం ప్రశాంతం । ధ్యాత్వా మునిర్గచ్ఛతి భూతయోనిగ్ సమస్తసాక్షిం తమసః పరస్తాత్ ।

ஜனசஞ்சாரமில்லாதவிடத்தில் சுகாசனத்தில் வீற்றிருந்து சுத்தமான மனசையடைந்து, கண்டம், சிரசு, சரீரமுதலிய வுறுப்புகளைச் சரியாய் அமைத்து, வருணாசிரம தருமங்களை விட்டு,

சகல இந்திரியங்களையு மடக்கி, பக்தி பூர்வக மாய் ஆசாரியனைத் தியானித்து, இருதயபுண்டரீகத்தில், இரஜோகுணமற்ற சுத்தமான மனசையுடையவனுய், அவ்விருதயமத்தியில் விளங்குகிற பரிசுத்தரும், துக்கமற்றவரும், சிந்திக்கக் கூடாதவரும், காணக்கூடாதவரும், அநந்தரூபமுடையவரும், மங்களசொரூபரும், சாந்தரும், மோக்ஷசொரூபரும், வேதகாரணரும், முதலிடை கடை யில்லாதவரும், ஒருவரும், வியாபகரும், ஞானநந்தரும், ரூபமற்றவரும், அற்புதரும், பிரபுவும், மூன்றுகண்ணுடையவரும், நீலகண்டரும், சாந்தமுடையவரும், உமாசமேதரு மான பரமேஸ்வரனைத்தியானஞ்செய்து, ஞானியானவன் சமஸ்தத்திற்கும் சாக்ஷியும், அஞ்ஞானத்திற் கப்புறப்பட்டும், பூதங்களுக்குக் காரணமுமாயு மிருக்கிற பரமாத்துமாவை யடைகிறுன்.

సబ్రహ్మా సశివ స్సేంద్రః సోఽక్షరః పరమస్స్వరాట్ । సఏవ విష్ణు స్సప్రాణ స్స కాలోఽగ్ని స్సచంద్రమాః । సఏవ సర్వం యద్భూతం యచ్చభవ్యగ్ం సనాతనం । జ్ఞాత్వా తం మృత్యు మత్యేతినాన్యః పంథా విముక్తయే । సర్వభూతస్థమాత్మానం సర్వభూతానిచాత్మని । సంపశ్యన్ బ్రహ్మ పరమం యాతి నాన్యేన హేతునా ।

அவர் (அப்பரமாத்துமாவே) பிரம்மா, அவர் சிவன். அவர் இந்திரன். அவர் நாசமில்லாதவர். அவர் தானுய் விளங்குகிறவர். அவர் விஷ்ணு. அவர் பிராணன். அவர் காலன். அவர் அக்கினி, அவர் சந்திரன். உண்டானதும், உண்டாகப் போகிறதும் சருவமும் அவரே. எப்பொழுதும் அவர் உள்ளவர். அவரையறிந்தே மிருத்துவைக்கடக்கிறுன். முக்திக்கு வேறேவழியில்லை. சருவபூதங்களிலும், தன்னிடத்திலும் சர்வாந்தரியாமியான பரமாத்துமாவை நன்றுய்ப் பார்க்கிறவன் பரப்பிரம்மத்தை யடைகிறுன். வேறே எதுக்களினு லல்லவென்றறிக.

ఆత్మానమరణింకృత్వా ప్రణవం చోత్తరారణిం । జ్ఞాన నిర్మథనాభ్యాసా త్పాశం దహతి పండితః । సఏవ మాయా పరిమోహితాత్మా శరీరమాస్థాయ కరోతి సర్వం । స్త్ర్యన్న పానాది విచిత్ర భోగై స్సఏవ జాగ్రత్పరితృప్తిమేతి । స్వప్నేతుజీవ స్సుఖదుఃఖభోక్తా స్వమాయయా కల్పిత విశ్వలోకే । సుషుప్తికాలే సకలేవిలీనే తమోభిభూత స్సుఖరూపమేతి । పునశ్చ జన్మాంతర కర్మ యోగాత్స ఏవజీవః స్వపితి ప్రబుద్ధః ।

தன்தேகத்தை, நெருப்புண்டாகும் அரணிக் கட்டையாகவும், பிரணவத்தை மத்தாகவுங்கொண்டு, ஞானுப்பியாசத்தினுற் கடைந்து, பண்டிதன் அஞ்ஞானமாகிற பாசத்தைத் தகித்துவிடுகிறுன். அந்த ஜீவனே மாயையினுல் மோகிக்கப்பட்ட மனசை யுடைய சரீரத்தைப் பெற்று சர்வவியாபாரங்களையுஞ் செய்கிறுன். அவன் சாக்கிரதையில் ஸ்திரீ அன்னபானமுதலிய விசித்திரபோகங்களில் திருப்தியடைகிறுன். சொற்பனத்தில் சிவன் தன்னினுலும் மாயையினுலும் கற்பிதமான எல்லாலோகங்களிலும் சுகதுக்கங்களை யடைகிறுன். சுழுத்தியில் சகலமும் லீனமடைந்திருக்கையில் அஞ்ஞானத்தினுல் சுகசொரூபத்தை யடைகிறுன். மீண்டும் ஜன்மாந்தர கர்மத்தினுல் அந்த ஜீவன் நித்திரையி லிருந்து விழித்துக்கொள்ளுகிறுன்.

పురత్రయే క్రీడతియశ్చజీవ స్తతస్తు జాతగ్ం సకలం విచిత్రం । ఆధార మానంద మఖండ బోధం యస్మిన్ లయం యాతి పురత్రయంచ । ఏతస్మాజ్జాయతే ప్రాణో మనస్సర్వేంద్రియాణిచ । ఖం వాయు ర్జ్యోతిరాపః పృథివీ విశ్వస్య ధారిణీ ।

இப்படி ஜீவனுடைய தூல சூக்கும காரணங்களான மூன்றுசரீரங்களிலுங் கிரீடித்துக்கொண்டிருக்கிற பரமாத்துமனெவனே, அவனிடத்திலிருந்து சகல விசித்திரங்கள் உதிக்கின்றன. எல்லாவற்றிற்கும் ஆதாரமும், ஆநந்தமும், அகண்டமுமாயுமுள்ள அன்னேனிடத்தில் மூன்று சரீரங்களும் லயமடைகின்றன. இவனுலேயே பிராணன், மனது, சர்வேந்திரியங்கள், ஆகாயம், வாயு, அக்கினி, ஜலம், சகலத்தையுந் தரித்துக்கொண்டிருக்கிற பிருதிவி இவைகளுண்டாகின்றன.

యత్పరం బ్రహ్మ సర్వాత్మా విశ్వస్యాయతనం మహత్ । సూక్ష్మాత్సూక్ష్మతరం నిత్యం తత్త్వమేవ త్వమేవతత్ । జాగ్రత్స్వప్నసుషుప్త్యాది ప్రపంచం యత్ప్రకాశతే । తద్బ్రహ్మాహ మితిజ్ఞాత్వా సర్వబంధైః ప్రముచ్యతే । త్రిషు ధామసు యద్భోజ్యం భోక్తా భోగశ్చ యద్భవేత్ । తేభ్యో విలక్షణ స్సాక్షీ చిన్మాత్రోఽహం సదాశివః । మయ్యేవ సకలం జాతం మయి సర్వం ప్రతిష్ఠితం । మయిసర్వం లయంయాతి తద్బ్రహ్మాద్వయమస్మ్యహం ।

சர்வாத்துமாவாயும், இவ்வுலகத்திற்கு இருப்பிடமாயும், சூக்குமத்திற்குஞ் சூக்குமமாயும், நித்தியமாயு முள்ள பரப்பிரம்ம மெதுவோ, அதனிடத்தில் நீ யிருக்கிறுய். உன்னிடத்தில் அது இருக்கிறது. சாக்கிரதை சொப்பனஞ்சுழுத்தி முதலியவைகளிலும் எவ்வுலகம் பிரகாசித்துக்கொண்டிருக்கிறதோ, அது பிரம்மசொரூப

னென்றறிக. இப்படி யறிகிறவன் சருவபந்தத்தி லிருந்தும் விடுபடுகிறான். மூச்சரீரங்களிலும் புசிக்கத்தக்கதும், புசிக்கிறதும், போகிப்பதும், எந்த சிவனோ, அதைக்காட்டிலும் விலக்ஷணனாயும், சாக்ஷியாயும், சிற்சொரூபியாயுமிருக்கிற சதாசிவன் (பிரம்மாவாகிய) நான்தான். என்னிடத்தில் சகலமுமுண்டாகிறது. என்னிடத்தில் சருவமுமிருக்கிறது. என்னிடத்தில் சருவமும் லயமடைகிறது. அந்த ஒன்றான பிரம்மம் நானாகிறேன்.

అణోరణీయానహ మేవతద్వన్మహానహం విశ్వమిదం విచిత్రం। పురాతనోహం పురుషోహమీశో హిరణ్మయోహం శివరూపమస్మి । అపాణిపాదోహ మచింత్యశక్తిః పశ్యామ్య చక్షు స్సశృణోమ్యకర్ణః । అహం విజానామి వివిక్తరూపో నచాస్తివేత్తా మమచిత్సదాహం। వేదైరనేకైరహ మేవవేద్యో వేదాంతకృ ద్వేదవిదేవచాహం । నపుణ్యపాపే మమనాస్తినాశో నజన్మదేహేంద్రియబుద్ధిరస్తి । నభూమిరాపో మమవహ్నిరస్తి నచానిలోమేస్తి నచాంబరంచ। ఏవం విదిత్వా పరమాత్మరూపం గుహాశయం నిష్కళమద్వితీయం । సమస్తసాక్షిం సదసద్విహీనం ప్రయాతిశుద్ధం పరమాత్మరూపం ।

அணுவைக் காட்டிலும் அணுவா யிருக்கிறேன். மகத்தைக்காட்டிலும் மகானா யிருக்கிறேன். இந்த விசித்திரமான உலகமும் நான். புராதனமா யிருப்பவனும் நான். புருஷனும் நான். ஈசனும் நான். இரணியரூபனும் நான். மங்கள ரூபனும் நான். நான் கைகாலில்லாதவன்; ஆயினும் சிந்திக்கக்கூடாத சக்தியையுடையவன். கண்ணில்லாமல் பார்க்கிறேன். காதில்லாமல் கேட்கிறேன். நான் எல்லாவற்றையு மறிகிறேன். ஒரேவித ரூபமுள்ளவன். என்னையறிகிறவ னில்லை. நான் ஞானரூபன். நான் அநேகவேதங்களிலும் அறியத்தகுந்தவன். வேதாந்தத்தை யறிவித்த வேதியனும் நான். எனக்குப் புண்ணிய பாபமில்லை; நாசமில்லை; ஜெனனதேகேந்திரிய புத்திகளில்லை. எனக்குப் பூமி ஜலம் அக்கினி யில்லை, வாயுவில்லை, ஆகாசமில்லை. இப்படி விதிக்கப்பட்ட பரமாத்துமரூபம் இருதய குகையி லிருக்கிறது. நிஷ்களமாய் ஒன்றாயிருக்கிறது. சமஸ்தத்திற்குஞ் சாக்ஷியாயும் சத்து அசத்தென்ப தில்லாததாயும் சுத்தமாயுமுள்ள பரமாத்துமரூபமாயிருக்கிறது.

యశ్శతరుద్రీయ మధీతే సోగ్ని పూతో భవతి । స్వర్ణస్తేయాత్పూతో భవతి । స్సురాపానాత్పూతో భవతి । బ్రహ్మహత్యాత్పూతో భవతి । కృత్యాకృత్యాత్పూతో భవతి । తస్మాదవిముక్త మాశ్రితో భవతి । అత్యాశ్రమీ సర్వదా సకృద్వా జపేత్ । అనేన జ్ఞానమాప్నోతి సంసారార్ణవ నాశనం । తస్మా దేవం విదిత్వైనం కైవల్యంపదమశ్నుతే కైవల్యం పదమశ్నుత ఇతి । కైవల్యోపనిషత్సమాప్తా ॥

எவன் இந்த சதருத்திரீயத்தை அத்தியயனஞ்செய்கிறானோ அவன் அக்கினியைப்போலாகிறான். பொன்திருடின பாபத்திலிருந்து விடுபடுகிறான். சுராபானஞ்செய்த தோஷத்திலிருந்து விடுபடுகிறான். பிரம்மகத்தி செய்த பாபத்திலிருந்து விடுபடுகிறான். கிருத்தியாகிருத்தியங்களில் தவறுதலுண்டான தீமைகளினின்று விடுபடுகிறான் ஆகையால் மோக்ஷத்தை யடைந்தவனாகிறான். வருணாசிரமங்களைக் கடந்தவன் எப்போதும் அல்லது ஒருதரம் ஜபித்தாலும் சமுசாரமாகிற கடலை நாசஞ்செய்கிற ஞானத்தை யடைகிறான். ஆகையால் இப்படி (பரமாத்துமாவை) அறிந்தவன் கைவல்லியபதத்தை யடைகிறான். கைவல்லியபதத்தையடைகிறான் என்று கைவல்லியோபநிஷத்து முடிந்தது.

ஸஹநாவவத்விதிஸாந்திஃ.

ஸ்மிருதிஸாரப் பிரகரணம்.

விருத்த பராசர ஸ்மிருதி.

(௯௬-ம் பக்கத் தொடர்.)

అశ్వమేధోగవాలంభో సన్న్యాసఃపలపైతృకం ।
అసవర్ణాసుతానాంతు విభాగస్యప్రకల్పనా ॥

அசுவமேதம், கோமேதம், சந்நியாசம், மாமிசத்தினாற் சிராத்தஞ் செய்தல், தன்வருணமல்லாத மனைவியிடத்திற் பிறந்த புத்திரர்களுக்குப் பாகத்தைக் கற்பித்தல். (௨௪)

తథాసవర్ణపుత్రాణాం విభాగవిషమోపిచ ।
నియోగాత్పరభార్యాసు పుత్రసంతానకల్పనా ॥

அப்படியே, தன்சாதிமனைவியிடத்திற்பிறந்த புத்திரர்களுக்கு விரோதபாகங்களைக் கற்பித்தல், பிறர் மனைவிகளிடத்தில் நியமம்பெற்று புத்திரோற்பத்தி செய்தல். (௨௫)

దత్తౌరసేతరేషాంతు పుత్రత్వేనపరిగ్రహః ।
అసగోత్రేషాంజిబంధాత్పరంపుత్రస్యసంగ్రహః ॥

தத்தன், சுபுத்திரன் ஆகாதவர்களுடைய புத்திரபரிக்கிரகம், வேற்றுக்கோத்திரத்தில் உபநயனமானபிறகு புத்திரஸ்வீகாரஞ்செய்தல். (௨௬)

నకుర్యాచ్చసగోత్రేపి వివాహానంతరం కలౌ ।
నకుర్యాద్భిన్నవర్ణేషు పుత్రసంగ్రహణంతథా ॥

சுயகோத்திரத்திலுங்கூட விவாகமானபின்பு புத்திரர்களைக் கிரகித்தல், கலியுகத்திலே செய்யக்கூடாது. அப்படியே வேற்றுச் சாதிகளில் புத்திர சுவீகாரமுஞ் செய்பக்கூடாது. (௨௭)

అప్రజావిధవానార్యా స్వగోత్రేవాన్యగోత్రకే ।
నస్వీకార్యోనదాతవ్యో మౌంజీబంధాత్పరంకలౌ ॥

சந்தானமில்லாத விதவை ஸ்திரீயினுலாகிலும், தன்கோத்திரத்திலாகிலும், வேற்றுக்கோத்திரத்திலாகிலும் கலியுகத்தில் உபநயனமான பின்பு தத்து வாங்கக் கூடாது, கொடுக்கவும் கூடாது. (௨௮)

కలౌతుదత్తభేదేన కేవలాద్దత్త్రిమాత్సుతాత్ ।
హోమాదివిధ్యభావేతు నహిదత్తోభవేత్కలౌ ॥

கலியுகத்தில் முக்கியமான தத்துபுத்திரனைக் காட்டிலும் (துவயாமுஷ்யணுதி) தத்துபேதங்களில்லை. கலியுகத்தில் ஓம முதலான விதிகளின் பாவமில்லாமல் தத்தன் ஆகமாட்டான். (௨௯)

అన్యగోత్రేగృహీతస్య సంతతేర్దత్త్రిమస్యచ ।
ప్రవేశనంనకుర్వీత జనకస్యకులేకలౌ ॥

கலியுகத்தில், அந்நியகோத்திரத்திலே கிரகிக்கப்பட்ட தத்தனுடைய சந்ததியாரிடத்திற் பிரவேசித்தலை நற்குலத்தார் செய்யக்கூடாது. (௩௦)

సవర్ణజ్ఞాతయోయేచ నకుర్యుర్దత్తకస్యచ ।
సంతతేరసగోత్రస్య హ్యఘసంకోచనంకలౌ ॥

கலியுகத்தில், எவர்கள் தன்சாதி ஞாதிகளிலே, அவர்களுக்கு அந்நியகோத்திரனை தத்தனுடைய சந்ததியாருக்குஞ் சூதக சங்கோசத்தைச் செய்யக்கூடாது. (௩௧)

అసగోత్రేగృహీతస్య సంతతేర్దత్త్రిమస్యచ ।
సపిండననిషేధస్తు నపాలకకులేకలౌ ॥

சுயகோத்திரமல்லாத வமிசத்தில் கொள்ளப்பட்ட தத்தனுடைய சந்ததிக்குச் சபிண்டங் கூடாதென்பது, க்ஷத்திரிய குலத்திலே கலியுகத்திலில்லை. (௩௨)

సవర్ణేషుగృహీతానాం పుత్రాణాంసంతతేరపి ।
మృతౌదశాహమాశౌచ సంకోచం నకలౌయుగే ॥

கலியுகத்தில், சுசாதிகளிடத்திற் கொள்ளப்பட்ட புத்திரர்களுடைய சந்ததியாருக்குங்கூட மரணஞ் சம்பவித்தாலும் பத்துநாட்பரியந்தம் ஆசௌச சங்கோசமில்லை. (௩௩)

గ్రహణేత్వసగోత్రస్య మౌంజీబంధాత్తుపూర్వతః ।
నిరీక్షణంతువయసో నకుర్యాచ్చకలౌయుగే ॥

உபநயனத்திற்கு முன்பு சமானகோத்திரமல்லாதவனுடைய பரிக்கிரகத்தில், வயதைப்பற்றிக் கவனிப்பது கலியுகத்திலே கூடாது. (௩௪)

ద్వ్యాముష్యాయణభేదాశ్చ తథాదత్తప్రభేదకాః ।
నభవేయుఃకలియుగే జాతిసాంకర్యభీతితః ॥

துவயாமுஷ்யாண பேதங்கள், அப்படியே தத்துபேதங்கள், சாதிசங்கிரக முண்டாகுமென்கிற பயத்தினாலே, கலியுகத்திற் பார்ப்பது சரியானதல்ல. (௩௫)

ద్వ్యాముష్యాయణకానాంచ తథాప్రవరకల్పనా ।
కలౌతునకృతాసద్భిస్తస్మాత్త్యాజ్యామనీషిభిః ॥

அப்படியே, துவயாமுஷ்யாயணங்களுக்கு, கோத்திரகற்பனை, கலியுகத்தில் பெரியோர்களால் செய்யப்படவில்லை. ஆகையால் அறிஞர்களாலும் விடப்படத்தக்கது. (௩௬)

సాయంప్రాతర్బ్రాహ్మణాస్తు ప్రవరద్వయవాచనం ।
నకుర్వంత్యయతస్తస్మాన్నద్వ్యాముష్యాయణాఃకలౌ ॥

பிராம்மணர்கள் மாலை காலைகளில் இரண்டு கோத்திரங்களைச் சொல்லுவதை, எந்தக்காரணத்தினால் விட்டார்களோ, அந்தக்காரணத்தினால், கலியுகத்தில் (கோத்திரமல்லாத) துவயாமுஷ்யாயணங்கள் கூடாது. (௩௭)

వివాహభేదాచరణం వర్ణసాధారణేనతు ।
నైవకుర్యాత్కలియుగే బ్రాహ్మదైవార్షకంవినా ॥

கலியுகத்தில், பிராமம், தைவம், ஆரிடம், விவாகங்கள் தவிர, பிராமணர் முதலான சாதிகளிலே (காந்தருவ, ராக்ஷச, பைசாச, அசுர) விவாக பேதங்கள் நடக்கக்கூடாது. (௩௮)

రజోదర్శనాత్పూర్వం కన్యాదాననిషేధకం ।
కలౌయుగేనకుర్వీత త్వేవంవైబ్రహ్మశాసనం ॥

இரஜஸ்வலை யாவதற்கு முன்பு கன்னியாதானம் செய்யக்கூடா தென்பதை, கலியுகத்தில் ஆசரிக்கக்கூடாது. இது பிரமாக்கினை என்பது பிரசித்தம். (இரஜஸ்வலை யாவதற்குமுன் கன்னியாதான நிஷேதம் யுகாந்தர விஷயமென்று வியாக்கியானம்.) (௩௯)

విధిపూర్వంసవర్ణేషు కన్యాదానేకృతేసతి ।
నివర్తనంనకుర్వీత నిమిత్తాదర్శనేసతి ॥

சமானமான சாதிகளிடத்தில் விதியின்படி கன்னியாதானம் செய்யப்பட்டிருக்க, காரணமல்லாத விஷயங்களிலே அந்த தானத்தை நிவர்த்திக்கக்கூடாது. (௪௦)

(வரும்.)

ஆரியமத சித்தாந்தப் பிரகரணம்.

விசிஷ்டாத்துவைதம்.

———o———

(எக-ம் பக்கத் தொடர்.)

அவ்விதமான கிரீடிப்பு "సత్యంజ్ఞానమనంతం బ్రహ్మ", "విజ్ఞానం బ్రహ్మ", "ఆనందో బ్రహ్మ" என்று சொல்லப்பட்டபடி யிருக்கும். திவ்வியாத்தும சொருபமாவது, "నీలతోయదమధ్యస్థా విద్యుల్లేఖేవ భాస్వరా", "యత్తే రూపం కల్యాణతమం తత్తే పశ్యామి", "య ఏషోంతరాదిత్యే హిరణ్మయః పురుషో దృశ్యతే హిరణ్యశ్మశ్రుః హిరణ్యకేశ ఆప్రణఖాత్సర్వ ఏవ సువర్ణస్తస్య యథా కప్యాసం పుండరీకమేవమక్షిణీ తస్యోదితి నామ", "తస్య హైతస్య పురుషస్య రూపం యథా మహారజనం । వాసో యథా పాండ్వావికం । యథేంద్రగోపో యథాగ్న్యర్చిర్యథా పుణ్డరీకం యథా సకృద్విద్యుత్తం సకృద్విద్యుత్తేవ హ వా అస్య శ్రీర్భవతి", என்றும், "కేయూరవాన్ మకరకుణ్డలవాన్ కిరీటీహారీ హిరణ్మయవపుః ధృతశంఖచక్రః" என்றும், சொன்னபடியிருக்கும். ஈச்சுவர திவ்வியமங்களவிக்ரகமாவது, "యస్సర్వజ్ఞః సర్వవిత్", "పరాస్య శక్తిర్వివిధైవ శ్రూయతే" என்று சொன்னபடியிருக்கும். ஈச்சுவரனது அநந்த கல்லியாண குணங்களாவது, "యో బ్రహ్మాణం విదధాతి పూర్వం। యో వై వేదాంశ్చ ప్రహిణోతి తస్మై", "స ఏవ సృజ్యస్స చ సర్గకర్తా స ఏవ పాత్యత్తి చ పాల్యతే చ బ్రహ్మాద్యవస్థాభిరశేషమూర్తిః విష్ణుర్వరిష్ఠో వరదో వరేణ్యః" என்று சொல்லப்பட்டிருக்கும். இவ்வாறு அவன் சேஷ்டிதங்களெல்லாம், இவ்வித மவ்வித மென்று பேதித்துக் கூறுவதற் கசாத்திய மாகையால், "తదక్షరే పరమే వ్యోమన్", "తద్విష్ణోః పరమం పదం", "వైకుంఠే తు పరే లోకే" என்று கூறப்படும் பரமபத வைகுந்தத்தில் எழுந்தருளி யிருக்கும் சர்வேச்சுவரன் அபரிச்சின்னன் என்று சொல்லுவதற்குச்சமுசயமில்லை. ஆகையால், "ఏతాన్తి నరస్సదా బ్రహ్మ ధ్యాయినో యోగినో హ్యమే । తేషాం తత్పరమం స్థానం యద్వై పశ్యన్తి సూరయః" என்கிறபடி, அவ்விதமுடைய பரமபதநாதன் சந்நிதியைச் சேர்ந்த முக்தாத்துமாக்கள் சருவசக்தியானவனின் இச்சையால் அடையும் நித்தியமான பகவதநுபவ கைங்கரியாந்தங்கள், அபரிச்சின்னமாயே யிருக்கின்றன. திவ்விய ஞானக்கண்களுக்குந் தோன்றாத திவ்விய சொரூபம் ஈச்சுவரனுக்கு இல்லையென்று கூறுவதற்கர்கிலும் ஈச்சுவரனேயில்லை யென்று கூறலாமல்லவா? ரூபமில்லாத சூந்நியத்தையா முக்தர்க ளனுபவிப்பார்கள். ஈச்சுவர னரூபி யென்று தானும் மனதைச் சலிய வைக்காமல், சரீரமும், சைதன்னியமுங்கூட இல்லாதவனைப்போல் அப்பியாச வசத்தால் சிலகாலத்திற்குச் சிலநேரம் வெறுமனேயிருக்க நேர்ந்தபோது, அஞ்ஞானந்தகாரம், வாஸ்தவமான சுழூத்திபோன்ற ஒரு தசையையடையும் அவை சமாதியென்றும், பிரமைக்கியமென்றும், விழித்துக் கொள்ளும்போது பாவிக்கக்கூடிய புனருத்தானத்துக்கு ஏதுவான அந்த தசையை முத்தி யென்று எப்படிச் சொல்லக்கூடும், அதில்தானனுபவித்த சுக மெதுவு மில்லை யென்பது யாவருக்கும் வெளிச்சமேயல்லவா? திரிகுணமான பிரகிருதியை விட்டதற்கு "అహమన్నమ్" என்று அப்பிராக்கிருதமான நித்தியானந்தம், அடைவதற்குத் தானும், ஆனந்தங்கொண்டு ஆனந்திக்கும், பரவஸ்துவாகும் சர்வேச்சுவரனும் உண்டான போதல்லவா மோக்ஷ சுகத்தினுடைய அதிசயம் விளங்கும். அப்படி யல்லாமல் உபய சொரூபங்களும் சூன்னியங்களேயாகும்போலிருந்தால் மோக்ஷ சுகமிருக்கிறதென்று கூறுவது எவ்வளவும்சம்பவிக்காது. சுழூத்தியி லிருந்து தனக்குப் புனருத்தானம் உண்டாகிறதும், மீண்டும் மீண்டும் அவ்வித விகாரதசையை அடைந்திருப்பதும், சர்வஜனனுபவ சித்தமாயிருக்க, ஒருவிசைசொப்பனவிகாரமடைந்த பிரம்மமே மீண்டும் மீண்டும் அந்த சொப்பனத்தையடையாது; அடையும் பிரதி சொப்பனத்திலும் மித்தியா பிரபஞ்சம் உண்டாயிருக்குமல்லவா? அப்போது அந்தப் பிரபஞ்சங்களுக்கு ஆத்யந்தக முக்தியெப்படிக் கைக்கூடு மென்று சொல்லக் கூடும். இதுவுமன்றி ரூபமில்லாத பிரம்மத்திற்குங்கூட சொப்பன விகாரமுண்டென்று சொல்லத்தகுமா? பிரம்மம் தன்னில் தான் மித்தியா பிரபஞ்சங்கள் கற்பித்துத் தன்னில் தானஞ்ஞானியாய், நானாவிதங்களாய் பிரமித்து மீண்டும் மீண்டும் சுஞ்ஞான மடைந்து சாந்தி நிரசனஞ்செய்து கொண்டிருக்கு மென்பதற்கு பிரச்சந்ந பௌத்தர்களான மித்தியாவாதிகளே சாதிப்பார்களே யன்றி, நிஜமறிந்த பரமவைதிகர்க ளப்படிச்சொல்லார்கள்.

வாயுவே நம்முடைய கண்களுக்குத் திருசிய மாகாமலிருக்கும்போது, அதற்கு அந்தரியா மியாயிருக்கும். ஈச்சுவர னெப்படி திருசிய மாவான் என்று யூகிக்காமல், "ప్రత్యక్షమేకంచార్వాకాః" என்று கூறப்படும் ஈச்சுவரன் நமக்குத்தோன்றுகைமையால் அவன் அரூபியென்று சொல்லலாமா? ஈச்சுவரனே அரூபியானால், அவனிலிருந்து—ஊர்ணநாபியென்னும் புழுவிலிருந்து நூல் வெளியானது போல் நாநாவித விசித்திர ரூபங்களுடன் கூடிய பிரபஞ்ச மெப்படி யுண்டாகும்? இந்திரஜாலஞ் செய்பவன் தன் மனதில் யூகித்த ரூபங்களை எதிரிகள் கண்களுக்கு மறைப்பதுபோலச்செய்யும் தான் அங்கோல பீஜ தைல சக்தியைப்போன்றது பிரம்மத்தில் லீனமாயிருக்கின்ற மாயாசக்தி யென்றும், அதின்கார்யமான சிதசித்துக்களுடன் கூடினபிரபஞ்சம் மித்தியை யாகாவிட்டால் தத்தியமெப்படியாகுமென்றும், அப்போது பிரம்மத்திற்கு ஒரு சுத்த சத்வமான ரூபமிருப்பதினாலேயே அவ்விதமானவனை யாசிரயித்துக்கொண்டு திரிகுணமென்னும் மூலப்பிரகிருதி நித்தியமாயிருக்கிறதென்றென்றும், பிரம்மத்துக்கும் வேறான சேதனங்க ளிருக்கிறதினாலேயே அவர்களுக்குப் பிரம்மத்தினுடைய சங்கற்பத்தால் இந்த மூலப்பிரகிருதி நானாவிதசரீரங்களாகப் பரிணமித்து அவஸ்தாத்திரயத்தினாலும் ஆவரித்து, அஞ்ஞானன்னியதாஞ்ஞான விபரீத ஞானங்கள் உண்டாகும்படி செய்துக்கொண்டிருக்கின்றன வென்றுங் கூறவேண்டும், இப்படிக்கூறாமல் மூலப்பிரகிருதி பிரம்மத்தையே இவ்வளவு பிராந்திகளுக்கு உட்படுத்துகின்றன வென்றால், இந்திரஜாலங்களும் தன் மாயையிலேயே முழுகவேண்டிவரும். அப்படியல்லவென்றால், பிரம்மமும், அசித்தும், ஜீவர்களும், அநாதியா யிருக்கிறார்களென்பதே நிச்சயமென்று தெளியவேண்டும். அல்லது ரஜ்ஜு சர்ப்ப பிராந்தியைப் போன்றது இந்த பிரபஞ்சமென்றும், பிரமத்தை விட அன்னியர்க ளில்லாதபோது பிரமிக்குமவர்களும், ரஜ்ஜுவும், முன்னெப்போதோ பார்த்த பயஜனகமான ஸர்ப்பமும், பிரம்மமேயாகவேண்டிவரும். இப்படி பிரமத்தினிடத்தில் பிராந்திகளும், விகாரங்களும்கற்பிப்பது சரியான விசாரணைபற்ற குறைவென்று தோன்றுகின்றது. அபேதவாத மனர்த்தகமென்று பேதசுருதிகளையே பிரமாணமாகக் கொண்டு ஜீவேசுவரர்களுக்கு பேதங்களிருக்கிறதென்றும், அதில் ஜீவர்களுக்கு மிருக பக்ஷி மநுஷியாதி ஸம்ஸ்தானபேதங்கள் ஸ்வரூபங்களிலேயே யுண்டென்றும், இதுமுதலான விஷயங்கள் சித்தாந்தப் படுத்தப் பட்டிருப்பது துவைதமதம். அபேதசுருதிகளைக் கொண்டு பேதவாதம் விவகார தசையிலேயே யல்லது, சுழுத்தி அவஸ்தையைப்போன்ற முக்தி தசையிலே கைக்கூடாதென்றும், அவ்வளவும் ஒரு பிரம்மமேயென்று சித்தாந்தமாயிருப்பது அத்வைதமதம். "బ్రహ్మవేదబ్రహ్మైవభవతి", "యత్రత్వస్య సర్వమాత్మైవాభూత్", "విభేదజనకేజ్ఞానే నాశమాత్యంతికంగతే", "ఆత్మనోబ్రహ్మణో భేదమసన్తంకఃకరిష్యతి", "పరమాత్మనాభవత్యభేదీ" இத்தியாதிகளில், ஜீவபிரம்ம ஐக்கியம் பிரதிபாதிக்கும்படியாய்த் தோன்றினாலும், "పరమాత్మాత్మనోర్యోగః పరమార్థ ఇతీష్యతే । మిథ్యైతదన్యద్ద్రవ్యం హి నైతి తద్ద్రవ్యతాం యతః" என்று கூறியபடி ஹேயபிரதிபட வஸ்துவுடன் ஹேய போக்கிய வஸ்துவுக்கு ஐக்கியம் கூறுவது அநுசிதமேயன்றி, "తమ్ యథాయథోపాసతే తథైవ స్తతస్తే నామృతత్వమేతి" "ఏతత్సామగాయన్నాస్తే", "నిరామయతేనిత్యమ్భవన్తి నిరుపద్రవా", "ఆగచ్ఛయత్సభద్రంతే పుండరీకమహామతే" "మదున్వధాని నిత్యాత్మ మమపారిషదాశ్రయ" இத்தியாதிகளில், சேதனர்களுக்கு "స్వేనరూపేణాభినిష్పద్యతే" என்று சொல்லியபடி சொரூபாவிர்ப்பாவ பூர்வகமாய் நித்திய நிர்த்தோஷ நிஸ்ஸீமாநந்தகமாயிருக்கும் ஸவிபூதிக ஸமஸ்தகல்யாண குணாத்மக பரமாத்ம யாதாத்மியாநுபவ ஜனித பிரீதிகாரித கைங்கரியமே பரம மோக்ஷ புருஷார்த்தகமாய்ச் சொல்லியிருப்பதினாலே, பூர்வோக்த ஐக்யோக்திகளும், "ఆత్మభావంనయంత్యేనం తద్బ్రహ్మధ్యాయినమ్మునే" "వికార్యమాత్మనశ్శక్త్యా లోకమూకర్షకోయథా" నిరంజనః పరమం సామ్యముపైతి । మమసాధర్మ్యమాగతాః । తద్భావభావమాపన్నః । భోగమాత్రసామ్యలింగాచ్చ । సోశ్నుతే సర్వాన్కామాన్సహబ్రహ్మణావిపశ్చితేతి । పూతామద్భావమాగతాః । శుద్ధసత్వమయాస్సర్వే బ్రహ్మానందసుఖామలాః । శంకచక్రధరాముక్తా సర్వాభరణభూషితాః । స్రగ్విణఃపీతవసనాః పురుషాస్తత్రసంస్థితాః । అన్యోన్యస్పర్శనాత్తత్ర శ్రీపుంసోః క్రీడమానయోః । నిరవధికంప్రవృద్ధ్యేత హరిభక్తిసుఖంరసం" இத்தியாதி கடகோக்திக

ளின் பிரகாரம் "అక్షరంపరమంధామమ్ వైకుంఠం శాశ్వతంపదం" என்றிருக்கும் பரம பதத்தில் முக்தாத்மாக்கள் லபிக்கும் பரமாத்ம ஸாம் யத்தின்கீழ் அந்வயித்துக்கொண்டு "భూతానిష్ణుర్భువనానివిష్ణుః" என்று சொல்லியவிடத் தில், தேவமனுஷியாதி சப்தங்கள் சரீரத்வார மாய் சரீரிக்கே செல்லுவதுபோல, ஸர்வாந்த ரியாமியான விஷ்ணுவுக்குச் செல்லுவதைத் தெரிந்துக்கொண்டு பந்ததசையிலேயும், முக்த தசையிலேயும் தத்துவத் திரயங்கள் நித்திய மென்று சித்தாந்தப் பட்டிருப்பது விசிஷ் டாத்துவைதம். ஈச்சுவர நிரோதுகஜாயமான கிருபாகடாக்ஷ விசிஷ்டனான முமுக்ஷு சேத னன் பிரதமத்திலே லோகத்தில் சமஸ்தமான வர்களுக்கும் ருசிஜனகமாய்வியாபித்திருக்கும் யோக மஹிமைகளுக்கும் அகப்பட்டு, ஆத்து மாநுபவ ஞானமுமடைந்து; அத்துவைதமே சிரேஷ்டமென்று எண்ணியிருந்து, பின்பு து வைத பரமான வாக்கியங்களால் அபேததரிச னத்தில், "ஈஸ்வரோஹம்" என்றிருக்கும் துஸ்வாதந்திர முதலியவை பாரதந்தரியமான சேதன சொரூபத்திற்கு விநாசங்களென்று நன்றாய்த்தெரிந்து கொண்டு, துவைதஞானத் தில் பிரவேசித்து, அதில் முக்தி தசையிலே யும் "విభేదజనకేపరమాత్మనాత్మభేద" என்னும் வாக்கியங்களுக்கு விரோதமாய் சேதனர்கள் தேவமனுஷிய பசுவாதி பேதங்களுண்டாகி யிருப்பா ரென்கிற வீணபிப்பிராயங்களையும் பார்த்து, திருப்தி யடையாமல், பரமவைதிக அசேஷ வித்வஜ்ஜன சம்மதமாய் யதார்த்தப் பிரகாசமாய்விளங்கும் விசிஷ்டாத்வைதத்தில் பிரவேசித்து யுஜ்ஜீவிப்பதென்பதே யுக்தம். ஆகையால், சத்தியமான அர்த்தம் இதுவென் று தெரிந்தும், பாண்டித்தியபலத்தால், தான் பிடித்த முயலுக்கு மூன்று கொம்பிருக்கின்ற தென வாதிப்பதுபோல தாம் அவலம்பித்தி ருக்கும் மதவைராக்கியம் பிடித்து இலாயர்க ளைப்போல நியாயம் அந்நியாயமாகவும், அந்நி யாயம் நியாயமாகவும் வாதித்துக் கொண்டு காலத்தை வீணில் கழித்துக் கெடாமலிருக்க, முமுக்ஷுக்களுக்குச் சிரேஷ்டமாகச் சொல்ல ப்பட்டிருக்கிற விசிஷ்டாத்துவைத மதத்தை அவலம்பித்து, பெரியவர்கள் சந்நிதியில் பஞ்ச சம்ஸ்கார பூர்வகமாய் மந்திர மந்திரார்த்தங்க ளும் அர்த்தபஞ்சக ஞானங்களும் அடைந்து, பிரபன்னாதிகாரிகளாய் ஜன்மங்களுக்கு ஸார் த்தகத்வ முண்டாக்கிக்கொள்ளுவார்களென்று கோரப்படுகின்றார்கள். "మనుష్యాణాం సహస్రేషు కశ్చిద్యతతిసిద్ధయే। యతతామపిసిద్ధానాం కశ్చిన్మాంవేత్తితత్వతః। అధీత్యాపిచతుర్వేదం సర్వశాస్త్రాణి సర్వశః। బ్రహ్మతత్త్వం నజానాతి దర్వీపాకరసంయథా" என்று சொல்லியபடி, பரப்பிரம்ம எதார்த்த ஞான முண்டாகக் கோறி, வேத சாஸ்திரங்க ளைக்கற்று எவ்வளவு யத்தினங்கள் செய்தா லும் ஈச்சுவர நிர்ஹேதுக ஜாயமான கிருபை சிலருக்கன்றி அது யாவருக்கும் கிடைக்காது. சுபம்.—தி. சி. அ.

சைவமதம்—இலிங்கம்.

(க00-ம் பக்கத்தொடர்.)

இலிங்கம் என்னும் விஷயமாகப் பலர் அபி ப்பிராயங்களை முன் சஞ்சிகையில் எடுத்துக் காட்டி யிருக்கிறோமன்றோ? இச்சமயம் எமது அபிப்பிராயத்தையும்சிறிதுவிளக்குவோமாக. இலிங்கத்தின் மகிமைகளைப்பற்றி இலிங்க பு ராணத்தில் விசேஷமாக விளக்கியிருக்கிறது. இதற்கு விரோதித்து மற்றொரு புராணத்தில் இழிவாகச் சொல்லப்பட்டிருக்காது. புராணங் களெல்லாம் ஆதியில் ஒன்றாயிருந்ததை மெய் ம்மொழியாளரும், விஷ்ணுவாமிசபூதருமான வியாச பகவானால் பதினெட்டாக விரித்து ச்சொல்லப்பட்டது. அவர் ஒன்றுக்கொன் று விரோதமாக விளக்கி வைத்தாரென்பது ஒப்புக்கொள்ளாத விஷயம். ஆனால் புரா ணங்களில் சாத்துவிகம், இராஜசம், தாமசம் என்று மூன்றுவிதமாகப் பிரிக்கப்பட்டதெ ன்றும், அவ்வக்குணங்கள் மீசுரப்பட்ட ரிஷி கள் சொல்லியவைகளே ஒன்றுக்கொன்று விரோதமா யிருக்கின்றனவென்றும், அதை யே வியாசர் உண்மைக்குத்தாரமாக விளக்கி வைத்தாரென்றும் புராணீகாள் கருத்து. அ ப்படி ருஷிகள் செய்ததும் யாதாமொரு கார ணத்தைப் பற்றி யிருக்குமே யன்றி வீணாய்ச் சொல்லி யிருக்கமாட்டார்கள். புராணங்களில் உண்மையும், கற்பனையுங் கலந் திருப்பது முண்டு. அவைகள் ஞானவான்களுக்கு உண் மையையும், அஞ்ஞானிகளுக்குக் கற்பனை யையும் போதித்ததா யிருக்கும். புராணங்க ளில், வேதவேதாந்தங்களை நன்குணர்ந்த தே வர்களுக்குத் தாயாதிகளான அசுரர் கொடுங் கோன்மை புரிந்து வந்ததினிமித்தம், சிவ விஷ்ணுக்களாலே, லோகாயதம், பிரச்சன்ன பௌத்தமுதலிய வேதமாகிய சாஸ்திரங்களை இராக்ஷசர் தாமசகுணவிருத்தியை யடையும்

பொருட்டு செய்யப்பட்டனவாக ஆங்காங்கு சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றையே கௌதமர், பிருகஸ்பதி முதலியவர்களும் அவலம்பித்துச் சில சாஸ்திரங்களைச் சொன்னார்களென்றே அப்புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கும். சைவாகமங்களிலும் இவ்விஷயங்களைக் காணலாம். இவ்வசுரக்கிருத்தியங்களே உலகத்தில் பரவத் தொடங்கின. ஆயினும் அவைகள் அப்பொழுதைக் கப்பொழுது வேதாந்த சித்தாந்தங்களைக் கொண்டு கண்டிக்கப்பட்டிருக்கின்றன. உலகம் பிந்ருசிப்பட்டதாகையால், இக்காலத்திலும் சுராகும்பஸ்தாபனம், மச்சியமாமிசபக்ஷணநிவேதிதம், பகலிங்கபூஜை முதலிய துரபிமான வநுஷ்டானங்களுண்டாயின. வேதவித்துக்களும், சத்துக்களுமாகிய சைவவைஷ்ணவ சித்தாந்திகளுக்கு இவைகள் புறம்பாகவே யிருக்கின்றன. ஆண்குறி=லிங்கபூஜை யென்பது அவைகளிலொன்று. சாக்ஷாத்சைவமென்று சொல்லப்பட்ட பிரம்மசொரூபமானதும், மும்மூர்த்திமய மானதுமுள்ள இலிங்கத்தை அந்த துரநுஷ்டானத்திற்குச் சாமியமாகப்பாவித்துப்பிரமிப்பது அவிவேகிகள் செய்கையாகுமென்றறிக.

அன்றியும் இக்காலத்தில் சில போலிசைவவைஷ்ணவர்கள், சற்சாஸ்திரங்களை யுணர்ந்தவர்கள்போல்நடித்து, சிலமதியிலாச்சிடர்களை வரித்து, தங்களுக்கு வேறே ஜீவனோபாயமில்லாம லலைவதைத் தவிர்த்துக்கொள்ளுவானுன்னி, அவ்வேயகுண வநுஷ்டானங்களே சுத்தசைவ வைஷ்ணவர்களுக்குரிய தென்று ஒருவருக்கொருவர் காட்டி; அவர்களில் வைஷ்ணவர்கள் சைவர்களை நோக்கி, உமது சிவனுடைய ஆண்குறி அழிந்துவிழச் சாபம் பெற்றபடி, விழுந்தலிங்கத்தை பூஜிக்கின்றீர்களே என்பார்கள். அதைக்கேட்ட சைவர்கள் வைஷ்ணவர்களை நோக்கி, அப்படி யறுந்து விழுந்த லிங்கத்தை விஷ்ணு யோநியாய்த் தாங்கினாரென்று சித்தாந்தப்படுத்தி விடுவார்கள். இதனால் சிவபிரானுக்கு லிங்கமறுந்து விழுந்ததாக ஒப்புக்கொள்ளுவார்கள். இப்படிப்பட்ட துர்வாதிகளுக்கே இக்கலியுகந் தகுந்ததாயிருக்கும். ஆனால் பூர்வீக வைஷ்ணவர்கள் இலிங்கத்தை ஆண்குறியாகப் பாவித்து என் கண்டித்து வந்தார்களென்று ஒரு கேள்வி பிறக்கும். அதெல்லாம், துராசாரமாகிய அசுரசிஷ்டாசாரங்களைப்பற்றிக் கண்டித்தனவே யல்லாமல், சுத்தசைவர்களையன்று. அப்படிச்செய்ததும் சைவமாயாவிகள் இராஜாங்கமோங்கியகாலத்தில் அவர்கள் வைஷ்ணவர்களைக்கொடுமைசெய்து வந்தநிலையாம். இப்படியே இவ்விருமதஸ்தர்களிலுள்ள போலி சித்தாந்திகள்செய்து வந்தார்களென்றறிக.

சில நாட்களுக்குமுன் ஓர் பத்திரிகையில், திருமாணிக்குழி என்ற சிவக்ஷேத்திரமானது சிவபிரான் லிங்கமறுந்து விழுந்த ஸ்தானமானபடியால் அப்பெயர் வாய்ந்ததென்று ஓர் ஓதுவார் சொன்னதாக, மற்றொரு சைவர் அதைக்கண்டித்தெழுதியிருக்கிறார். இக்கொள்கை சைவர்களையும் விட்டு நீங்கவில்லை. சாஸ்திரக்கியானத்தில் சமரச சுஞ்ஞானமுண்டாகும் வரையில் எத்தகையோருக்கும் உண்மைக்கருத்துகள் விளங்காவாம்.

அறிவுக்கெட்டாத அண்டகோளத்தை யறியவேண்டுமானால், பிண்டகோளமூலமாகவே யறியவேண்டிய துசிதமாகையால், பிரம்மத்தின் லிங்கசொரூபத்தை யறியவேண்டுமாயின், பிண்டத்தின் லிங்கத்தின் மூலமாகவே யறியவேண்டுமென்றும், அவ்விலிங்கம் பிரஜாவிருத்தி செய்யும் ஆண்குறியே யென்றும், அப்படியே அண்டயோனியாகிய சத்திஸ்தானம் பிண்டயோநி ஸ்தானமென்றும், அது விஷ்ணுவென்றும், சித்தாந்தப்படுத்தி, அனாசாரங்களை இரகசியமாக அநுஷ்டித்துக்கொண்டு வருகின்றார்கள். இவர்கள் பாழ்த்தவெண்ணம் என்று எம்பெருமான் கடைக்கணித்து ஒழிப்பாரோ? அவர்கள் வினையொழிந்தபின்னோ?

சைவவைஷ்ணவர்களுக்குள்ளே யெப்போது சச்சரவுகளுண்டாயதோ, அன்றே சகல சத்சாஸ்திரங்களிலும், கலிகற்பனா வித்தைகளைக்கற்ற சில போலிப்பண்டிதர்கள் துராசார வனுஷ்டானங்களை நுழைத்து ஒருவர்க்கொருவர் தூஷிக்கத்தொடங்கிவிட்டார்கள். இவ்வுண்மையை யறியவேண்டின், கல்கத்தா, பம்பாய், சென்னைமுதலிய இராஜதானிகளிலுள்ள ஏட்டுப்பிரதிகளிலும், அச்சுப்பிரதிகளிலும் இவ்வித்தியாசங்களைக் காணலாம். ஆகையால் இக்காலத்தில் ஒருவன் உண்மையைக்கண்டுபிடிப்பது மிகவுங்கஷ்டமாய் விட்டது. ஒருபுத்திமான் சாஸ்திரஞானத்தில் தெளிவை யடைய விரும்பினால் சுருதி மிருதி இதிகாச புராண சற்சாஸ்திரங்களில் மிகவும் வல்லவரான நல்லாசிரியர் பக்கல், பூர்வோத்தர விருத்தமின்றி செவிமடுத்துக் கேட்டாலல்லது உண்மைகள் விளங்காவென்று உறுதியாகச் சொல்லுவோமாக.—சித்தாந்தி.

அத்வைதமதம்.

II-ம். பிரசங்கம்.

மஹாவாக்கியம்—விருத்தம்.

உலகமுதற்பொருளை யும்பர்க் குணர்வரிதாம்பொருளை - யோதிபவேதாகமத்தி னுச்சியினுட்பொருளை, பலகலையின்பொருண் முடிவின்முடிவானபொருளை—பற்றறப்பற்றிய பெரியோர்பரவியவான்பொருளை,அலைதிவலைநுரைகடலினுதித்தொடுங்குமாபோ - லகிலாண்டமுதித்தொடுங்குமதன் மூலப்பொருளை, இலகிய சற்குருவாகி யானுகும்பொருளை—யெங்குமாம்பரம்பொருளை யாமும்வணங்குதுமே.

சகோதர வாத்ஸல்லிய சிகாமணிகாள்!

சென்ற பிரசங்கத்தில் பிர்மமொன்றுமே நித்தியமென்றும், ஜெகத்தனித்திய மென்றும், பிர்மம் இரண்டற்ற தென்றும், பிரஸ்தாபித்ததில், இரண்டற்றதென்பது சுத்த சூனியமோவென சம்சயத்திற்கு இடந்தந்தமையால், அவற்றின் சொரூபத்தினை யீங்கு சாஸ்திரோக்தமாய் நிரூபிப்பாம். அதாவது:—

மஹான்கள் சமஸ்த வேதாந்த சாரங்களையும் அத்தியாரோப மென்றும், அபவாதமென்றும இரண்டு யுக்திகளைத் தழுவிக்கொண்டே சித்தாந்தப்படுத்தி யிருக்கிறார்கள். அவற்றின் விபரம்:—

கைவல்லிய நவநீதம்.

"ஆரோபமத்தியாசங்கற்பனையாவவெல்லா-மோரோர்வஸ்துவினை வேறே யோரோர்வஸ்து வெனவோர்த - ஞருபெணியாத் தோன்றனாகைத்தறிபிற்றேன்ற - னீருகொனற் றேன்ற னிரந்தாம் வெளியிற்றேன்றல்."

அத்தியாரோபம் என்பது உண்டான ரஜ்ஜு, சுத்தி, ஸ்தாணுவாதியில் கிரமத்தில் இல்லாத சர்ப்ப ரசத சோராதி கற்பிதம்போலச் சத்ருபப்பிர்மத்தில் இல்லாத மாயா பிரபஞ்ச கற்பனையே. இதுசர்ப்பமல்ல ரஜ்ஜுவே, இது ரசதமல்ல சுத்தியே, இது சோரனல்ல ஸ்தாணுவே யென்பதுபோல விசாரமுகத்தால் இது பிரபஞ்சமல்ல பிர்மமென்பதே அபவாதமாம்.

"இப்படிப்போல நாம ரூபங்க ளிரண்டுமின்றி - யொப்பமாயிரண்டற் றென்றுயுணர்வொளி நிறைவா நிற்கு, மப்பிரமத்திற்றேன்று மைம்பூத விகாரமெல்லாஞ், செப்பியகற்பிதத்தாற்செனித்தவென்றறிந்துக்கொள்ளே"

பழுதையினிடத்து பாம்பென்னும் நாமரூபமெங்ஙனமின்றே? அதுபோல சைதன்னிய மிருந்தபடி யிருத்தலினுல் நாமரூபங்களிரண்டுமில்லை, பாம்பென்னும் பிராந்திதோன்றிய விடத்து மறைந்த விடத்தும் பழுதை துவிதமாகவில்லை, ஆகலின் இரண்டற்றதென்றும், மெய்யாகப் பாம்பு காரியமாயிற் பழுதையு மெய்யாகக்காரணமாகலாம்; அங்ஙனமின்றே லிங்ஙனமுமின்றும். ஆகவே காரணகாரியத்துவிதம் பழுதைக்கின்மை வாறுபோன்று பிராந்தி ஜெகஜீவபரத்தால் சைதன்யம் காரணமும் ஜெகஜீவபரங் காரியமுமாயிற்று; மெய்யாக ஜெகஜீவபரம் காரியமாயின் மெய்யாகச் சைதன்யமுங் காரணமாகலாம்; அங்ஙனமின்றே லிங்ஙனமுமின்றும். ஆகவே காரணகாரியத்துவிதஞ் சைதன்யத்திற் கின்மையா லிரண்டற்றதெனச் சொன்னதைச், சுத்த சூன்யமெனக்கொள்ளற்க. சுத்த சூன்யமாகத் தோன்றுமவசரமுண்டு, அதனுலேயே ஆன்றேர்கள், "முப்பாழும் பாழாய் முடிவிலொருசூனியமாய்" என்றும், "பின்னு முன்னுங் கெட்ட சூனியமதென்பர் சிலர்" என்றும், "பெருவெளியா யைம்பூதம் பிறப்பிடமாய் பேசாத பெரியமோனம் வருமிடமா" யென்றும் "எட்டியெட்டிப் பார்ப்பவர்க்கு எட்டஎட்ட நிற்குமது சுட்டுக்கடங்காதடி கிளியே என் சுந்தரத்தின்பேருருவம்" என்றும் திருவாய்மலர்ந்தருளினுர்கள்.

இப்பிரமத்தின் எதார்த்த நிலை ஸ்வாநுபூதி பிரத்தியக்ஷமகான்களே யறிதற்பாலவை: நம்போலிகள் அதனை வினவுதல் அதிபால்யமாகிய ஒருகன்னிகை தனது மாதாவிடம் விஷயானந்த மெத்தன்மைத்து, எனக் கேட்பதையொக்குமன்றி வேறென்னை? விஷயாநுபவமே, சொல்லக்கூடுமோனதன்றுகலின் பிர்மாநுபவம் வெளியிடற் கரிதென்ப திலீஷத்தேனுஞ்சம்சயமின்று. இவ்வித பிரமானந்தமொன்றுளவென சாஸ்திரங்கள் கோஷிப்பதிலெம்மனேர்க்கு நகைத்தற் கிடமா மென்பதும் கீழ்வருஞ் செய்யுட்களாலுணர்க.

"கன்னிகை யொருத்தி சிற்றின்பம் வேம்பென்னினுங் கைக்கொள்வள் பக்குவத்தில்-கணவனருள் பெறுமுனே சொன்னவாறென்ன வெனக் கருதி நகையாவளது போல்" என்றும், "பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை பெறுப்பேதையறிவாளோ பேரானந்த-முற்றவர்க்கே கண்ணீர்கம்பலே யுண்டாகு முறுதவரோ கன்னெஞ்ச முடையரார்வர்"

என்றுமே

பிரமத்தைக்குறித்து வர்ணிக்கப்புகுங்காலத்து தத்துல்யமாய்ச் சொல்வதற்கு, இப்பூவுலகத்தின்கண்ணொன்றேனுமிலாமையால், வேறுவேறுபமானங்களுரைத்த லுசிதமாம். அதனால் ஒன்றுக்கொன்று விரோதப் படுகிறதேயெனச் சங்கிக்க வேண்டுவதின்று. அவற்றினைக்கோட லிங்ஙனமென அறிவே உலகமெனும் மகுடத்தின் கீழ் அறிஞர்கள் நன்குவிளக்கியிருப்பதுங்காண்க.

மேலும் ஜெகத் மெய்யாகத்தோற்றல் எங்ஙனமெனிற் கூறுதும்.

லாவணிக் கண்ணிகள்.

1. இந்தலோக மதி விந்தையன்றி சுகம்
இல்லை யில்லை சற்றேனுமே,
பந்தபாச சம்பந்த ஜென்மமே
பணியுருப்பினை மானுமே.

2. தரணியாண்ட கையொருவனு மன்னேன்
தநயர் மூவர்மா வீரராம்,
கருணை நற்குண மருவு தீரராம்
கழறு சூன்யமெனு மூரராம்

3. இருவர்பூமிசை பிறந்திலரிவரில்
ஏகனே கருவினும் மிலே,
திரிகுநர் கருதி யுறு பொருடனைத்
தேடி விண்ணிடமே நிலை.

4. அளவறு பழப் பொழிலிடை குமரர்
அணுகி செங்கனி யருந்தியே,
தளர்வதற்று வெம் பசி தவிர்த்தேயச்
சார்பில் வெண்டிரை பொருந்தியே.

5. ஓடு நன்னதிகள் மூன்று கண்டனர்
ஒன்று வெண் மணலிரண்டினீர்,
நாடுதற்கிலை யாடி நீர்பருகி
நண்பகல் கழித்தெய்து மூர்.

6. சேர வீடொரு மூன்றெதிர்ந் தனர்
செல்வனே யவற்றிரண்டில்லை,
கூரைமேன் மரஞ்சுவரி லொன்றினிற்
குடி புகுந்தன ரவ்வல்லை.

7. ஒருவருங் காணு நகர் வெளிமனை
உறைகுநர் கனக பாத்திரம்,
அருகுறு மவை மூன்றவற்றிடை
அழகிலோடுபய மாத்திரம்.

8. அறவினுந் தூளிய தானவொன்றினில்
ஆர்ந்த துரோண மூன்றதனிலே,
துரோண மூன்றகன்றெஞ்சு தண்டுலம்
சுகுணர் தாஞ்சமைத் திதனிலே.

9. வாயிலாப் பனவ ரெண்ணிலற்கு முன்
வைத்தன ரவருண்டபின்,
ஆயமிச் சமதருந்தி வேட்டம
தாடியே யவணிருந்தரென்.

10. தாயுணர்த்திடச் சேயிளமையிற்
சரியென் றெண்ணுதல் மாண்பதே,
ஆய தன்மைபோல் மாயலோகினை
அறிவிலோர்களுங் காண்பதே.

மேற்கோள்.

ஞான வாசிஷ்டம்.

1. சித்த வஞ்சனையின் மூலமாங்கதையைச்
செல்வனுக் கருந்தவ னுரைப்பான்,
மெய்த்தகை யிலாதோர் சிறுவனீயன்னை
விரும்பி யோர் கதை விளம்பென்ன,
சத்தியம்போலவெறும்பொய்யேயுரைப்பா
டாணிபன் குமரோர் மூவர்,
சுத்தவீரமு நற்குணங்களுஞ் சிறந்தோர்
சூனிய நகரிலே யுறைவோர்.

2. மூவரிலிருவர் பிறந்தில ரொருவன்
மூலமாங் கருவினுமில்லை,
யாவதுங் கருதித் திரிபவர் விண்ணி
லளவறு பழமரச் சோலை,
மேவவுமதனிற் செழுங்கனிதுய்த்து
வெம்பசி தணிந்து மேற்சென்றார்,
காவரு காக மூன்று நன்னதிகள்
கரைபொருந் திரையொடு கண்டார்.

3. ஓடுநன்னதியி லிரண்டு நீரில்லை
யொன்று வெண் மணலதாமிதனி,
லாடி நீர்துளைந்து பருகினாரந்தி
யாகிமேல் வருநக ரடைந்தார்,
வீடுமூன்றெதிர்ந் தாரதிலிரண்டில்லை
மேன்மரஞ் சுவரிலாதொன்று,
கூடியவவற்றிற் சுவரிலாவீட்டிற்
குடிபுகுந்திருந்தனர் குமரர்.

4. ஒருவருங்காணு நகரிலேவெளிவீட்
டுறைபவர் கனகபாத்திரமூன்,
றருகுறக்கண்டா ரதிலிரண்டோடா
மறவிலுந் தூளியாமொன்று,
சொருபமில் கடத்திற் றுரோண மூன்றதனிற்-றுரோணமூன்றகன்று மிக்கிருந்த,
பருவரிசியைத்தாஞ் சமைத்துவாயில்லாப்
பனவரெண்ணிலர்க்கு முன்படைத்தார்.

5. அவரெலாநிரம்ப வுண்டபின்மிகுந்த
தருந்தினர் வேட்டைகீளாடி,
யிவருமூவரு மங்கிருந்தனரென்ன
விளமையா னம்பினன் சிறுவன்,

புவனமுமிவ்வா றறிவிலர்காண்பர்
புகன்மனவிரிவு சங்கற்பம்,
விவரமாமிதனு லுலகமாமிதனே
விடுநிருவிகற்பமாயிடுதி.

கருத்து.

அத்துவீதான்ம ஸ்வரூபத்தினைத் தரணி பன் என்றும், அதின் பிரதிபலனமாய் ஜீவேஸ்வரஜெகங்களைக் குமாரர் என்றும், மித்தையாம்பிரகிருதியைச் சூனிய நகர்என்றும், சிதாகாசத்தினை விண்ணென்றும், மனோராஜ்யத்தி லுண்டாகும் விடயசுகங்களை அளவறு பழமரச் சோலை யென்றும், முவ்வவஸ்தையை முவ்வித நதியென்றும், இவ்வவஸ்தையிலாடி சுகிப்பது இதனிலாடி நீர் துளைந்தென்றும் இனிவருஞ் சங்கற்ப வசமா யதை மேல்வரு நகரொன்றும், ஜீவேஸ்வர பிர்ம சாக்ஷியையறிந்தாரென்பதை வீடு மூன்றென்றும், அதில் ஜீவேசுரரில்லை யென்பதை அதிலிரண்டில்லை யென்றும், நிராதாரமாகிய பிர்மத்தைச்சுவரிலாவொன்றென்றும்; அப்பிரமாதாரத்திலிருப்பவர்களை வீட்டிற் குடிபுகுந்திருந்தனரென்றும், அகோசரமான சிதாகாசத்திலுறைபவனை ஒருவருங்காணு வெளி வீட்டுறைபவனென்றும், சச்சிதானந்த தெரிசனத்தை கனகபாத்திரமூன்றென்றும், அதிற் சத்துச் சித்தின்றடிப்பை அதிலிரண்டோடா மென்றும், உருவமற்ற ஆனந்தமயத்தைச் சொரூபமில் கடத்திலென்றும், காமாதிகளைத் துரோண மூன்றென்றும், இவை யாறும் நசித்த விடத்தில் சேஷித்திருந்த சத்துவமானதை அகன்று மிக்கிருந்த பருவரிசியென்றும், அம்மனதை யநுபவத்திற் கனாத்தலைச் சமைத்தென்றும், அதை மகா மவுனத்தி னுல்லாசத்திற் சேர்த்தலே வாயிலாப்பனவி ரெண்ணிலர்க்கு முன் படைத்தாரென்றும், அவ்வருள் பிரசாதம் பெற்றதை மிகுந்தருந்தினரென்றும், சகசநிஷ்டையி லேதிரரச் சஞ்சரித் திருக்கிறார்கள் என்பதை வேட்டைகளாடி யிருந்தனரொன்றுமேயாம்.

கைவல்லிய நவநீதம்.

"மலடிமைந்தனுந் தாணுவிற்புருடனும்
வான்மலர்முடிசூடி-
யிலகுகந்தர்ப்ப நகரிலேசுத்திகை
யிரசிதத்தை விலைபேசி
கலகமாயினுரிடையினிற் கயிற்றராக்
கடித்திருவருமாண்டா
ரலகையாயினுமொனும் விவகாரத்தை
யறிந்தவன்மயங்கானே."

மலடியுந் தாணுவுமெய் மைந்தனும் புருடனும்பொய், இதுபோல பிரக்ஞைமெய் ஏனையவைபொய், சூடி, பேசி, கலகமாகி, மாண்டு, அலகையாயினு ரென்பன வெல்லாஞ் சேட்டைகள். இதுபோல வந்தான், போயினன், பார்த்தான், கேட்டான், நினைத்தான், மறந்தான், அறிந்தான், அறியான் என்பனவுஞ் சேட்டைகள் அந்த வினைமுதல் மெய்யாயினந்தச் சேட்டைகள் மெய்யாகலாம். இந்த வினைமுதல் மெய்யாயி னிந்தச் சேட்டைகள் மெய்யாகலாம். ஒருபோது மாகாவாறுபற்றி இங்ஙன மாயவுவமையால் மித்தை யெனத் தெரிவித்தனர்.

இவைகளால் அஞ்ஞானமாகிய அறியாமையினுலேயே, லோகமெய்யாகத் தோற்றப்படுகிறதாக விளங்குகிறதன்ரு? அறியாமை யென்பது இருவகைப் பட்டது; கற்பித வறியாமை, ஆகாரியம் எனவும்; இயற்கை யறியாமையை, பிரமை யென்றும்; வடநூலார் கூறுவர். அவைகளுள் கற்பிதவறியாமை :— ஓர் மனிதன் அரசவேடங் கொண்டு, மற்றவரை ஆனந்திப்பிக்கக் கருதும் பொழுது, தன்னிடம் இயற்கையிலுள்ள ஊர்பெயர்முதலியவற்றை மறந்து, மற்றேதோ பாவனை செய்துக்கொண்டு, உண்மையில் தன்னிடம் அறியாமையைக் கற்பித்துக்கொண்டு நிற்கிருனல்லவா? அக்காலத்தில் அவன் தன்னிடம் செய்துக்கொண்ட அரசன் தன்மையை உண்மையாக உற்றுநோக்கில் பொய்யேயாயினும், அப்போலி யரசனைத் தனது சரீரத்தையே முதற்காரணமாகவும், தானுந்தனது சரீரமும் சேர்ந்து நிமித்த காரணமுமாகி, அவ்விடம் இயற்கையிலில்லாது காரணவசத்தாலுண்டான அறியாமையைத் துணைக்கருவியாய்க்கொண்டு, பலர்களிக்க அபிநயஞ்செய்கிருன்; அவ்வபிநயகாலத்தில் அவனுந் தன்னை யரசனுகப்பாவிக்கிருன்; பார்ப்பவர்களும் அந்தக் காலவரையில் உண்மை யரசனுகப் பாவிக்கிருர்கள்; அவ்விடம் அரசனில்லை யென்பதை அறியாதார் யாருமில்லையே யாயினும், அவர்கள் அக்காலத்தில் நன்ருய் அரசனுகப்பாவித்தல் எல்லோருக்குந் தெரிந்த விஷயமே; மேலும் ஒரு விசனகரமான நிலைமையை அபிநயிக்கும்போது மிக்க ஆவலோடு பார்க்கிறவர்களுக்குக் கட்டாயம் கண்ணீர் வருவதும், அதுகண்டு அத்துக்கம் வந்ததாக எண்ணித் தன்னையறியாமல் சில சேஷ்டைகள் செய்வதும், அநுபவமா யிருக்கின்றன

வல்லவா? தன்னிடத்தில் அத்துக்கத்திற்கிடமான ஜீவனுடைய கலை, சிறிதும் இல்லையேனும் அரசனைத் தான் பாவித்த காரணம் ஒருவகை அறியாமையே யொழிய வேறில்லை; அங்கு அபிநயத்தைப் பார்ப்பவருள்ளத்திற்றோன்றிய வேஷக்கார அரசன் போலியரசனாயினும், அபிநயமுடியும் வரையில், அவன் வேறென்றெண்ணாமல் இருத்தலால், அவன் தன்னை முதற்காரணமாகக் கொண்டு தானே நிமித்த காரணமாய் நின்று, அச்செயற்கையறியாமையைத் துணைக்காரணமாக்கி, இம் மூவ்வகைக் காரணங்களால் ஒரு போலி யரசனை யுண்டாக்கினானென்பதறிக. இவ்வாறே இயற்கை யறியாமையும், துணைக்காரணமாகிச் சொப்பன உலகம், கயிற்றிற்பாம்பு, முதலிய அசத்துக்களைத் தோற்றுவிக்கின்றது. இயற்கை யறியாமைக்கும் செயற்கை யறியாமைக்கும் பேதமேதெனில், இயற்கை யறியாமை முன்னிகழ்ந்து பிறகு உண்மை யறிவினால் விலகும்; இதற்கு உதாரணம்:—சொப்பன உலகு முன்னிகழ்ந்து பிறகு உண்டாகும் சாக்கிரவறிவினால் நாசமடைகின்றது. செயற்கை யறியாமையோ உண்மை யறிவின் பின்னுண்டாகித் தானே தனக்கு வேற்றுமையைக்காட்டும் எவ்வகை யறிவினாலாவது ஒழிகின்றது: இதனாலும் அஞ்ஞான தசையில் உலக மெய்யாகத் தோற்றுகிறதெனத் திடப்படும்.

இவ்வஞ்ஞான தசையில் உலகம் மெய்யாகத்தோற்றுதல், ஜலத்தின் சஞ்சலம் சூரியன் சஞ்சலமென்பது போலவும்; மேகமோடச் சந்திரனோடுமென்பது போலவும், நதியிலே ஓடமோடத் தீரத்தின் விருக்ஷமோடுமென்பது போலவும், மனையின் துவாரத்திற் பிரகாசிக்கின்ற சூரிய கிரணம் கை யசைக்கும்போது அசையுமென்பது போலவும், நிர்விகாராத்துமனுக்குத் தேகாதி யுபாதியாலான அவஸ்தா கற்பனா சமுசார விவகாரமாம். இதற்குப் பிரமாணம் வருமாறு :—

வாசுதேவமனனம்.

இந்த ஆத்மாவுக்குத் துக்கமானது சரீரப் பரிக்கிரகத்தினாலென்றும், சரீரப் பரிக்கிரகமானது கருமத்தினாலென்றும், சொல்லப்பட்டது. அந்தக் கருமமெது? அதெத்தனை விதம்?

கருமமானது புண்ணிய பாப மிசிரமென மூவ்விதம்: தேவாதி சரீரம் புண்ணிய கருமபலன், மனுஷ்யாதி சரீரம் புண்ய பாப மிசிர கருமபலன், மிருகாதி சரீரங்களெல்லாம் பாப கருமபலன், (என்றால் இப்படிப்பட்ட கருமபலன்களா லப்படிப்பட்ட ஜன்மங்களை யடைகிறான் என்பதுகருத்து) இப்படிச்சொல்லப்பட்ட மூவ்வித சருமத்திலும் உத்கிருஷ்டம், மத்தியமம், சாமன்னியம் எனத் தனித்தனி மூவ்விதம்: இப்படிச்சொல்லப்பட்ட கருமபேதத்தினாலே நாநாவித ஜென்மபேதமுமாகிறது: அதெப்படியென்னில் ஹிரண்யகருப்பாதி சரீரம் புண்ணியோத்கிருஷ்டம்; இந்திராதிசரீரம் புண்ணிய மத்யமம்; யக்ஷராக்ஷஸ பிசாசுமுதலிய சரீரம் புண்ணிய சாமான்னியம்; பிறருக்குத் துன்பத்தை யுண்டாக்கத்தக்க முட்களுள்ள மரங்கள், விஷமுள்ளமரங்கள், புலி பாம்பு தேள் கோட்டான் கொசு அட்டைமுதலான சரீரங்களெல்லாம் பாபோதகிருஷ்டம்; பலாமரம், மாமரம், வாழை, தெங்குமுதலான பழம், பத்திரம், புஷ்பம் முதலானவைகளாக உபயோகப்படுகிற விருக்ஷங்களும், கொடிகளும், ஊர் பன்றி, எருமை, கழுதை, ஒட்டைமுதலான சரீரங்களும், பாப மத்தியமம்; அரசு, துளசி, பசு, குதிரை முதலிய சரீரம், பாபசாமான்னியம்; இந்த மனுஷ்யலோகத்தில் நிஷ்காம கருமானுஷ்டானம், சாதன சதுஷ்டயம், சத்குருவையடைதல், சிரவணம், மனனம், ஆத்மஞானம், இப்படிக் கிரமமாக ஜீவன் முக்திக்கும், விதேகமுக்திக்கும், யோக்கியமான மனுஷ்யசரீரம் மிசிரகருமோத்கிருஷ்டம்; தன்னுடைய ஆசிரமத்திற்கு யோக்கியமானகருமங்களுடையவும், காமியகருமங்களுடையவும், அனுஷ்டான யோக்கியமாகிய மனுஷ்ய சரீரம் மிசிரகரும மத்தியமம்; சண்டாள, புல்கலை, கிராதயவனாதி மனுஷ்ய சரீரம் மிசிரகரும சாமான்னியம்; ஆகையினாலே, விவேகியாகிய புருஷன் இந்தக்கருமத்தினுடைய பலதாரதம்மியத்தைவிசாரித்து, பூமியில் மனுஷ்ய ஜன்மத்தில் மிசிர கருமோத்கிருஷ்ட ஜனனமானது எப்படி சித்திக்குமோ அப்படித் தன்னுடைய வருணாசிரம கருமங்களை பலத்திலிச்சையை விட்டு, ஈசுவரார்ப்பணஞ் செய்து ஆத்மவிசார மூலமாய், மோக்ஷப் பிராப்திக்காகவே பிரயத்தினஞ்செய்ய வேண்டியவனாயிருப்பானென்பது, சித்தாந்தம். இந்த மூவ்வித கருமமும் எதினால் செய்யப்படுகிறதெனிலோ, மூவ்வித கரணங்களினாலேயே செய்யப்படுகிறதென அறியவேண்டியது.

(வரும்.)

பொதுப்பிரகரணம்.

திருக்குறள்தாற்பரியம்.

(எகூ-ம் பக்கத் தொடர்.)

அறவாழியந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

பொருள்.

அறவாழியந்தணன்=தருமக்கடலாகியகடவுளது
தாள்=அடியாகிய (மரக்கலத்தை)
சேர்ந்தார்க்கல்லால்=சேர்ந்தவர்க்கல்லாமல்
பிறவாழி=(அதனின் வேறாகிய) பிறவிக் கடல்க
நீத்தல் அரிது=கடத்தல் கூடாது. [ளை

தாற்பரியம்.

தருமவடிவினராகிய கடவுளைச் சேராதார்க்கு ப்பொருளும் இன்பமுமாகிய கடல்களைக் கடத்தற்கூடாது. எனவே, அழிவில்லாத தருமசொரூபியாகிய கடவுளடியைக் காணாதவர்கள், அழிவையுடைய பொருளும் இன்பமுங்கூடியதுறையிலிறங்கி அழுந்துவா ரென்பதாம். அழுந்தாது கரையேறுவதற்குத் தருமமென்னும் கடலில் விளையாடும் கடவுள் அடிகளைப் பற்றவேண்டுமென்பது தேர்ந்ததென் றறிக.

கோளிற்பொறியிற் குணமிலவே யெண்குணத்
தாளை வணங்காத் தலை.

பொருள்.

கோளில்=(தத்தமக்கேற்ற புலன்களைக்) கொள்ளுவதில்லாத
பொறியின்=பொறிகள்போல்
எண்குணத்தான்=எண்குணங்களுடையவனது
தாளை=அடிகளை
வணங்காத்தலை=தொழாததலைகள்
குணமிலவே=பயன்படுதலுடையனவல்ல.

தாற்பரியம்.

கடவுள் பாதங்களை வணங்காததலைகள் பயன்படாவாம். எனவே, தலை வணங்காத போது நாவுந் துதியாதாகையால், அவனைத்துதியா நாக்களும் பயனிலவாமென்பதும் பெற்றும். பெறவே, அவனை நினைத்தலும், வாழ்த்தலும், வணங்கலுஞ் செய்யாவிடத்து, புலன்களாலும் பொறிகளாலும் பிரயோசனமின்றென்பது தாற்பரியம். எண்குணங்கள்=தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகப்பாசங்களினின்று நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பி லின்பமுடைமையாம்.

பிறவிப்பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவனடி சேரா தவர்.

பொருள்.

இறைவன்=தலைவனது
அடி=பாதமாகிய (மரக்கலத்தைச்சேர்ந்தார்)
பிறவிப்பெருங்கடல்=பிறவியாகிய பெருங்கடலை
நீந்துவர்=கடப்பார்
சேராதவர்=(அதனைச்) சேராதவர்
நீந்தார்=கடக்கமாட்டார்.

தாற்பரியம்.

கடவுள் பாதங்களைச் சேர்ந்தவர்கள் பிறவிக்கடலைக்கடப்பார்கள். சேராதவர்கள் பிறவிக்கடலைக் கடக்கமாட்டார்கள். எனவே, பிறவியானது பூர்வகர்மவாசனையைத் தொட்டுக் கரையில்லாமல் வந்துகொண்டே யிருக்கின்றமை யாலும், அப்பிறவியானது கடலி லுதிக்கும் அலைபோல உதித்து ஒடுங்கி ஓயாமல்வருவதாலும், அதைக் கடப்பதற்குக் கடவுட் பாததாமரையாகிய மரக்கலமன்றி வேறுகதி யில்லை யென்பதாம்.

ஔவையார் நீதிவாக்கியம்.

(எகூ-ம் பக்கத் தொடர்.)

சேர்விடமறிந்துசேர்.

பொருள்.

சேர்விடம்=நல்லிடத்தை
அறிந்து=ஆராய்ந்துணர்ந்து
சேர்=பின்பு அவ்விடத்துச்சேர்.

கருத்து.—மிகுந்த பலசாலியாயினும் பின் வருத்தங் கொடுக்கத்தக்க இடமல்லாத இடத்தைச் சேர்ந்தாற் கேடுவரும். ஆகையால் வருத்தங்கொடாதிருக்கத்தக்க நல்லிடத்தை ஆராய்ந்து சேரவேண்டு மென்பதாம்.

குறளுதாரணம்.

காலாழ்களரி னரியடூஉங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு.

பொருள்.

கண்ணஞ்சா=பாகர்க்கு அடங்காதவையும்
வேலாண்முகத்த=வேலையுடைய ஆள்களைக் கோத்த கொம்பையுடையவும்
களிறு=யானைகளை
காலாழ்=கால்புதைகிற இயல்பினதாகிய
களரில்=சேற்றுநிலத்திலே அகப்பட்டவிடத்து
நரி அடும்=நரிகளானவை கொல்லும்.

கருத்து.—மிகவும் ஆண்மையும் பெருமையுமுடைய யானை அதுசேரத்தகாத சேற்றுநிலத்தை யடைந்தால், அற்பமாகிய நரிகளால் வெல்லப்படு மென்பதாம்.

சையெனத்திரியேல்.

பொருள்.

சையென=சீயென் றருவருக்கும்படி
திரியேல்=உலாவித்திரியாதை.

கருத்து.—மேன்மக்கள் இகழும்படி வீணுக வீதிகளில் திரிந்தால், அந்தத் திரிவு உன்னை இழிவு படுத்தும். திரியாது அடங்கியிருந்தால் அந்த அடக்கம் உன்னை மேன்மைப் படுத்தும்.

குறளுதாரணம்.

அடக்கமமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

பொருள்.

(ஒருவனை)அடக்கம்=அடக்கமாகிய அறமானது
அமரருள்=தேவருலகத்தில்
உய்க்கும்=கொண்டுபோய்விடும்
அடங்காமை=அடங்காமையாகிய பாவமானது
ஆரிருள்=பொறுத்தற்கரிய நரகத்தில்
உய்த்துவிடும்=செலுத்திவிடும்.

கருத்து.—அடக்கமானது ஒருவனைத் தேவருலகத்திற் சேர்க்கும். அடங்காமையானது நரகத்திற்சேர்க்கும் என்பதாம்.

சொற்சோர்வுபடேல்.

சொல்=சொற்களில்
சோர்வுபடேல்=மறதிபடப்பேசாதை.

கருத்து.—நீ பிறரோடு பேசும்போது உன்னைமறந்து சோர்வுபடப்பேசாமல், பிறர்க்கு முனக்கு நன்மை தீமைக ளுண்டாவதை யறிந்து சாக்கிரதையாகப் பேசு.

குறளுதாரணம்.

ஆக்கமுங்கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

பொருள்.

சொல்லின்கண்=சொல்லிடத்து
சோர்வு=சோர்தலை
காத்தோம்பல்=(தம்மிடத்தே உண்டாகாமல்) காக்கக்கடவர்
ஆக்கமும்=பெருக்கமும்
கேடும்=அழிவும்
அதனால்=அச்சோர்வினாலே
வருதலால்=வருகையால்.

கருத்து.—ஆக்கத்திற்கு ஏதுவாகிய நல்ல சொல்லால் செல்வமும், கேட்டுக்கு ஏதுவாகிய தீயசொல்லால் தீமையும் வருவதால், சொற்சோர்வு வாராமல் உயிர்களைக் காக்கக்கடவர்.

சோம்பித்திரியேல்.

சோம்பி=சோம்பலை யுட்கொண்டு
திரியேல்=திரியாதை.

கருத்து.—நீ செய்யவேண்டிய முயற்சியைச் செய்யாது சோம்பலுடன் திரிந்தால், நீ கெடுவதுமல்லாமல், உனக்கு முன்னே உன் குடியுங் கெடுமென்பதாம்.

குறளுதாரணம்.

மடிமடிக் கொண்டொழுகும் பேதைபிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து.

பொருள்.

மடி=மடிக்கத்தகுவதாகிய
மடி=சோம்பலை
கொண்டு=(தன்னுள்ளே) கொண்டு
ஒழுகும்=நடக்கும்
பேதை பிறந்த=அறிவில்லாதவன் பிறந்த
குடி=குடியானது
தன்னினும்=அவனினும்
முந்து மடியும்=முற்பட அழியும்.

கருத்து.—அழிவுதருஞ் சோம்பலை யுட்கொண்டு நடக்கும் பேதையினால் காப்பாற்றப்படும் குடியானது முன்னே யழிந்து, அவன் பின்னே யழிவான் என்பதாம்.

தக்கோனெனத்திரி.

பொருள்.

தக்கோனென=நடுவுநிலைமை யுடையவனென்று புகழும்படியாக
திரி=சஞ்சரி.

கருத்து.—நீ சஞ்சரிக்க வேண்டு மிடங்களிலெல்லாம் இவன் நடுவுநிலைமை யுடையானென்று மதிக்கும்படியாக வாசஞ்செய் யென்பதாம்.

குறளுதாரணம்.

தகுதியெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

பொருள்.

பகுதியால்=(பகைவர், அயலோர், நட்பினர் என்னும்) பிரிவுதோறும்
பாற்பட்டு=(தன்) முறையை விடாது
ஒழுகப்பெறின்=நடக்கப்பெறின்
தகுதியெனவொன்றே=நடுவுநிலைமை யென்று சொல்லப்படும் ஓர் தருமமே
நன்று=நன்றாகும்.

கருத்து.—நடுவுநிலைமையென்று சொல்லும் தகுதியான அறமே நல்லதாம். அந்நிலைமை பகை, நட்பு, புதுமுகம் என்னும் மூன்றிடத்தும் நெறி தப்பாமலே நிற்பதாம்.

கட்டுக்கதைகள்.

தனக்குச்சொந்தமில்லாத இறகுகளைத் தரித்துக்கொண்ட கருங்குருமான்.

தான் பார்வைக்கு அலங்காரமா யிருக்கவேணுமென்று, பேராசைகொண்ட ஓர் கருங்குருமான் தனக்ககப்படும் அழகுள்ள இறகுகளினாற் சிங்காரித்துக்கொண்டு, தானெல்லாப் பறவைகளுக்கும் மேன்மையானதென்று பாவித்துக்கொண்டது. இதனால் அதின் கூட்டத்தார்களுக்குப் பொறாமையுண்டாகி, அவ்வுண்மையை யறிந்துக்கொண்டு, அதற்குச் சொந்தமில்லாத இறகுகளை யெல்லாம் பிடுங்கிவிட்டபிற்பாடு, புத்தியற்ற கருங்குருமான் தன்பூர்வீகநிலைமைக்குக் கொண்டுவரப்பட்டு, தன்ஜாதியாரால் இழிவாக்கப்பட்டது.

நீதி.

அகமுந் தரித்திரமுங் கூடியிருக்கும்போது அவை பகடியாய் விடுகின்றன. இரவல் பூஷணங்களினால் மகிழ்ச்சியடைவது எப்போதும் இழிவுக்கேதுவாகின்றது.

ஈயும், எறும்பும்.

ஒரு ஈயானது, ஒரு எறும்போடு மேன்மைக்காக சண்டைசெய்கையில், தான்சம்பந்தப்படாத கண்ணியமாவது, போகமாவது, இப்புவியில் எங்கே யிருக்கின்றது ? எல்லாக் கோயில்களும் அரண்மனைகளும் எனக்குத் திறந்திருக்கவில்லையா ? நான்தேவதைகளின் பலிகளிலும், இராஜாக்களின் விருந்துகளிலும் ருசி பார்ப்பவனல்லவா ? மேலும் இதுகளெல்லாம் பணமும் வருத்தமுமில்லாமல் கிடைக்கின்றதல்லவா ? நான் ராஜமகுடங்களை மிதிக்கிறேன். நான் இச்சிக்கும் நாயகிகளின் இதழ்களை முத்தமிடுகிறேன். இதுகளுக்கெல்லாம் என்ன சாக்குச் சொல்லப்போகின்றா யென்றுகேட்க, அதற்கு எறும்பானது, வீண்வீம்புக்காரா ! ஒருவரழைத்துவரும் விருந்துக்கும், அழையாமல் வரும் விருந்துக்கும் மத்தியி லிருக்கும் பேதம் அறியாயோ ? மனிதர்கள் உன் சாவகாசத்தை விரும்பாததினால் உன்னைப்பிடித்தவுடனே கொன்றுபோடுகிறார்கள். உனதுவருகை அவர்களுக்கு வேதையாயிருக்கிறது. உன் சுவாசத்திலேயே புழுக்களுண்டாகின்றன. உன்னுடைய முத்தமோவெனில், இப்போது தான் தீண்டிவந்த குப்பைமேட்டின்பரிமளமே யன்றி வேறென்ன ? நானோ வென்றால், என்கஷ்டார்ஜிதத்தினாற் சீவனஞ் செய்கிறதுமன்றியில் மழைகாலத்தில் சீவனஞ்செய்வதற்காகக் கோடைகாலத்தில் நாணயமாய்ப் பாடுபடுகிறேன். அப்படியிருக்க உன்வெட்கங்கெட்டவாழ்க்கை முழுதிலும் பாதிநாள் மோசஞ்செய்து வெற்றிகொண்டிருப்பதும், மறுபாதியில் பட்டினியா யிருப்பதுமா மென்றது.

நீதி.

சுகவாழ்க்கையானது மிகுந்த சங்கடங்கள் அணுகாதிருப்பதினாலல்லாமல் சொற்பபிரயோஜனங்களை யனுபவிப்பதினாலல்ல. கண்ணியமான மத்தியநிலையானது, மனிதன்கோரி அனுபவிக்கத்தக்க மகாசுகமுள்ளநிலையாயிருக்கின்றது.

தவளையும், ரிஷபமும்.

ஒரு பருத்த ரிஷபமானது, ஒரு பசும்பொற்றெட்டியில் மேய்ந்துகொண் டிருக்கும்போது, அதின் அருகில் கத்திக்கொண்டிருந்த ஒரு தவளைக்கு ஆச்சரியமும் பொறாமையு முண்டாய், பிரமிக்கத்தக்க அந்தரிஷபத்தின்காத்திரத்தைப் பார்க்கும்படி தன்குட்டிகளைக் கூப்பிட்டு, பாருங்கள்! சீக்கிரத்தில் நான் அந்தமிருகத்தைவிடப் பருமனாகுவேனென்று அதுகளுக்குச்சொல்லி, அப்படியே தான் மூச்சையடக்கித் தடித்துப் பெருத்துக் கடைசியில் தான்வெடித்து இறந்துபோய்விட்டது.

நீதி.

புத்தியில்லாதவர்கள் எப்போதுந் தங்களையே சிலாக்கியமாகவும், இதராள் தங்களுக்கு மேலானவர்களா யிருந்தபோதிலுங் குறைச்சலாகவும் நினைக்கிறார்கள். அது எப்போதும் அவர்களுக்குப் பொல்லாங்கையும் இழிவையு முண்டாக்குகின்றது. தங்கள் சக்திக்குமிஞ்சியிருக்குங் காரியங்களை நாடுவதினால் அனேகம்பெயர்களுக்குக் கெடுதியுண்டாகின்றது.

கழுதையும், கோநாயும்.

ஒரு கழுதைக்குத் தற்செயலாய் ஒருமுள்ளு தன் காலில் தைத்துக்கொண்டபடியால், நல்ல ரணவயித்தியன் வேணுமென்று, ஒரு கோநாய்க்கு மனுவுபண்ணிக்கொள்ள, அதுமுடிவில் தன்பல்லால் அதை வெளியிற் பிடுங்கி விடுகிறேனென்றுசொல்லி, கழுதைக்குச் சொஸ்தமாக்கினவுடனே, அது கோநாயின் கெட்ட எண்ணத்தை யறிந்து தன்ரணவயித்தியனை மற்றொருகாலினால் அதின்செவியின்கீழுதைக்க, அவ்வுதட்டியினால் அதுபிரமித்து விட்டுவிட்டு தன்னாற்கூடிய வேகத்தோடு ஓடிப்போய்விட்டது.

நீதி.

தீங்கு செய்தால் தீங்கே விளையும். நியாயஞ்செய்வது லோக நடைக்கு ஒத்திருக்கின்றது.

சிறுமிகள் விளையாட்டுக் கொம்மி.

சததனுவுபாக்கியானம்.

(அ0-ம். பக்கத் தொடர்.)

அப்போதும் பதி விரதையா மணி
யாங்கு சென்றிரு தாட் பணிந்து
இப்போது முறை செய்கின்றே னீவிர்
இழிவாஞ் செக்நா யல்ல வென்றாள். (31)

சததனு வென்னும் பூபதி நுஞ் சென்மஞ்
சதியா யமைந்த தென் சென்மம்
விதியின்படி நீவிர் நாயாய் நரியாய்
விட்ட ரதையு நினைப்பீ ரென்றாள். (32)

பூருவ சென்மங்க ளூட்டிட மன்னனும்
புந்தியி னினைத் துயிர் விட்டே
ஆருவமுடன் பிணந் தின்னுங் கழுகா
யவ் வனத்தினிலே பிறந்தான். (33)

ஜெயமணி மிக்க வருத்தங்கொண் டாங்கு
சென்று மன்னன் றன்னை நோக்கி
ஐயன்மீர் செய்யுஞ் செய்கை போதும்
அறிதி முன் சென்ம வண்ண மென்றாள் (34)

வேதத்தின் மார்க்கத்தைத் துறந்த பாஷண்ட
விணனிட முறை யாடினதான்
மீதுறும் பாப விசேஷத்தாற் கழுகாய்
விதித்தான் பிரம னென்றறைந்தாள். (35)

ஆகா வென் றலறி வேந்தனு நொந்து
அக் கழுவின் பிறப்பைத் துறந்து
காகா வென்று கூக்குர லிட்டிடுங்
காகமாய்ப் பிறந்து திரிந்தான். (36)

புத்தியிற் சிறந்த பத்தினி காகமாம்
புருடனைக் கண்டு மனங் கொதித்து
இத்தனை யாண்ட காற் பலி கொடுத்த மன்னு!
இப்பலி தின்னுங் காக்கை ரூபம். (37)

ஆகித் திரிய வெழுதினனோ பிரமன்
அந்தோ! வென, வொரு கொக்காகி
ஏகித் திரிய வதற்கு நினைப்பூட்ட
வேந்தன் மயிலாகப் பிறந்தான். (38)

அழகிய கலாப மயிலைப் பிடித்து தன்
னரண்மனைக் கேகி வேண்டு முணவை
பழகத் தந்துமே போற்றி சுஞ்ஞானம்
பகர்ந்து வளர்த்து வந்தனள் காண். (39)

அக்கால் ஜயமணி தந்தை செய்திட்ட
அசுவமேத யாகந் தன்னில்
மூக்கா லவபிரத தீர்த்தத்தி னீராட்டி
முழுகினு, ளந்தத் தீர்த்தந்தனில். (40)

நீராட்டி மன்னற்கு சுஞ்ஞான போதத்தால்
நிலத்தில் நாய்முதன் மயிலாகப்
போராடிப் பிறந்து வளர்ந்த வினையினை
புந்தியிற் பட யினி துரைத்தாள். (41)

உரைக்க வேந்தனு மெடுத்த சென்மத்தை
யுணர்ந்து துக்க மிகப் பெருகி
விரைவாய்த் தேகத்தை விட்டு ஜனகனும்
வேந்தற்கு மகனுகப் பிறந்தான். (42)

பிறந்து வளர்ந்து வந்தபோ தந்தப்
பேதைச் செயமணி தந்தைதனை
சிறந்த பருவச் சாடையாற் றூண்டி
செய்திடச் சொன்னுள் சுயம் வரத்தை. (43)

தந்தையும் பூரித்து மந்திரிமார்கள் பால்
தக்க யோசனை செய் தோலை போக்கி
விந்தையாய்ச் சுயம் வரங் கோடித்தனன்
விண்ணவர் துதிக்குங் காசி தன்னில். (44)

அங்க வங்க கலிங்க முதலிய
வைம்பத்தாறு தேச ராஜாக்கள்
தங்க டங்கள் புத் திர சமேதராய்ச்
சார்ந்தார் சுயம் வரந் தனிலே. (45)

பதியின் பக்தியு மிகச் சிறந்து வேறு
பதியைக் கனவிலும் நினையாள்
பதியாக வந்த மன்னர் கூட்டத்தினுள்
பதியைத் தேட மன முவந்தாள். (46)

விதேசுகை ராஜ குமாரனைப் பிறந்த
விதேயனையே சுயம் வரத்தில்
நிதானமாய்க் கண்டு மணமாலை சூட்டி
நினைத்த விரதத்தை முடித்தாள். (47)

சகல போகமும் பாக்கியமுங் கொண்டு
சல்லாப வுல்லாசமா யிருந்து
பகலு மிரவும் பிரியா மான்போல்
பதியுடன் மிக வாழ்ந் திருந்தாள். (48)

வைதேக ராஜன் சொர்க்க மடைந்தபின்
வள்ளற் சததனு மன்னனுகை
வைதேகி போன்ற ஜயமணி யுடன்
மன்னுயிர்த் தன்னுயிராய்ப் புரந்தான். (49)

மன்னர் மன்னர்களை வென்று திறை பெற்று
மகங்கள் தானம் பல செய்து
முன்னவர் முறைப்படி நெறி செலுத்தி
முடி துலங்க வரசு செய்தான். (50)

புத்திர பௌத்தி ராதியர் பெருக
புவியோர் வாழ்த்து மங்களம் பெருக
இத்தகை யாவுங் கற்புடை ஜயமணி
யேந்திழையா லென்று வாழ்ந்திருந்தான் (51)

முற்றிற்று.